**23.06.2023. OS. 98 /2018** பி.வா.சா.2 - சுப்பிரமணியன்

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

தாவா சொத்தின் சர்வே எண் தெரியாது. தாவா சொத்தின் விஸ்தீரணம் தெரியாது. தாவா சொத்தை வாதியின் பவர் ஏஜெண்டான சேது பிரதிவாதியிடமிருந்து கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். கிரையம் வாங்கியது 4 ½ செண்ட் என்று சொன்னார்கள். நான் வாடகைக்கு குடியிருந்த கட்டிடம் 2015ம் ஆண்டு கட்டப்பட்டது. மேற்படி கட்டிடம் வாதியின் இடத்தில் கட்டப்பட்டது என்றால் பிரதிவாதியின் இடத்தில் கட்டப்பட்டது. நிருபணவாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நான் தான் கூறினேன். நிருபணவாக்குமூலத்தில் 2வது பாராவில் 5வது வரியில் மேற்படி வாதிக்கு பாத்தியமான 3.2 செண்டில் தான் 2015 பிப்ரவரி மாதம் கடை கட்டப்பட்டது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கட்டிடத்தில் நான் பிரதிவாதியிடம் தான் வாடகைதாரராக இருந்துவருகிறேன். மேற்படி கட்டிடம் 2016 ஜனவரி மாதம் கட்டப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி கட்டிடம் வாதி விஸ்வநாதனுக்கு பாத்தியமான இடத்தில் பிரதிவாதி சின்னையாவால் கட்டப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும், நான் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.